

# புதிய அரசியலமைப்பில் மனித உரிமைகள்



சி. அ. யோகலிங்கம்




# மனித உரிமை என்பது

ஒரு பிரஜை சமுதாயத்தில் தனக்குரிய ஆளுமையை முழுமையாக அனுபவித்து வாழ்வதற்குத் தேவையான முன் நிப்நதனைகளின் கூட்டமாகும்.

## அனைத்துப் பிரஜைகளுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை உரிமைகள்

- வாழ்தலுக்கான உரிமை
- சித்திரவதைகளுக்குட்படுவதைத் தவிர்த்தல்
- சமத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமை
- சிந்தனைச்சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம்
- பேச்சுச் சுதந்திரம்
- கருத்துச் சுதந்திரம்
- விரும்பும் தொழிலைச் செய்யும் உரிமை
- விரும்பிய இடத்தில் வசிப்பதற்கான உரிமை
- விரும்பிய இடத்திற்குப் போக்கு வரத்துச் செய்யும் உரிமை
- விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமை

# மனித உரிமைகளை இழந்ததெவ்வாறு?

இயற்கை நியதிக்கிணங்க ஒரு மனிதன் பிறக்கின்ற போதே வாழ்வதற்கான பல உரிமைகள் இயற்கையாக அவனுக்கு உரித்தாகவேண்டும். பிறவிகள் அனைத்திலும் மேலான பிறவியாகக் கருதப்ப்டும் மனிதனுக்கு, இயற்கை இவ்வாறாக பெறுமதிக்க உரிமைகளை அனுபவிக்கும் தகமையை வழங்கியுள்ளது. அவ்வாறானவற்றை மனித உரிமைகளென அறிமுகப்படுத்த முடியும்.

இருப்பினும் மனித வரலாற்றின் சகல நிலைகளிலும் இவ்வியற்கையாக அனுபவிக்கவேண்டிய உரிமைகள் சகலருக்கும் ஒரே விதமாகப் அவ்வச் சமுகங்களால் அளிக்கப்படவில்லை. இதன் விளைவாக சமூக வாழ்க்கையானது துன்பம், துயரம் என்பவற்றின் நிலைக்களமாக அமையலாயிற்று. மனித இனத்திற்கு உரித்தான வலிமையின் விளைவாக மனிதன் இத்தகைய துன்பகரமான அனுபவங்களிலிருந்து விடுபடுவதற்கு தன் வரலாறு முழுவதிலும் நிரந்தர முயற்சியில் ஈடுபட்டான்.

# மனித உரிமைகளை இழந்ததெவ்வாறு?




பிரஜைகள் எவரும் தட்டிக் கேட்க முடியாத அதிகாரத்தினை மன்னன் அனுபவித்து வந்தமையால் மனிதர்களுக்கு அப்பாற்பட்ட சிரேஸ்ட பிறவியாக மன்னன் நாட்டு மக்கள் முன் விளங்கினான். தனது ஆட்சியில் கீழ் இருப்போரை எத்தகைய சித்திரவதைக்கோ அவமானத்திற்கோ உட்படுத்தவோ நாடுகடத்தவோ மன்னனுக்கு வரையறையற்ற அதிகாரம் இருந்தது.






# மனித உரிமைகளுக்கு.....




ஆதிக்க பலமும் பொருளாதார வலிமையும் கொண்ட வல்லரசு நாடுகள் பிற இனத்தவர்களை அடிமைப்படுத்திக் கொண்டதுடன் அவர்களது சொத்துக்களைக் கொள்ளையிடவும் ஆரம்பித்தன. தமது அதிகாரத்திற்கு உட்படுத்திக் கொண்டோரின் சொத்துக்களைக் கொள்ளையடித்தது மட்டுமன்றி அவர்களுடைய மதம். கலாச்சாரம், சுதந்திரம் அனைத்தையும் இவ்வேகாதிபத்திய வாதிகள் அழித்தொளிக்கலாயினர். மக்களைப் பல்வேறு இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் உட்படுத்திய ஏகாதிபத்திய வாதிகள் தாம் சுரண்டிய மக்களின் மனித உரிமைகளைச் சற்றும் மதிக்கவில்லை.




## அக்காலத்தில் மக்களின் புலம்பல் இவ்வாறிருந்தது

கிராமத்து விடுதனில் துள்ளித் திரிந்த
கடுவனுக்கு எதற்கு வரி
மார்பில் சுரக்கும் பாலுக்கும்
இனிச் செலுத்த நேருமோ வரி


*-புரன் அப்பு திரைப்படத்தில்*



நிலப்பிரபுக்கள் தமது நிலத்தில் தொழில் புரியும் குடியானவரையும் மற்றொரு சடப் பொருளாகவே கருதியமையால் அவர்களின் இன்ப துன்பங்ள், விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றைப் பற்றி எச்சந்தர்ப்பத்திலும் அலட்டிக் கொள்ளவில்லை. குடியானவரின் பிறப்பு. இறப்பு உட்பட அனைத்துச் செயற்பாடுகளையும் தீர்மானிக்கும் சக்தியாக நிலப்பிரபுவே விளங்கினான். குடியானவர்களுக்குரிய செயற்திறன், வலிமை என்பவற்றை நிலப்பிரபுக்கள் தமது உடைமைகளைப் போன்று சுரண்டலாயினர். இத்தகைய சுரண்டலுக்கு இலக்கான குடியானவன் இறுதியில் ஒட்டி உலர்ந்து போன சக்கையாக தனது வாழ்வை முடித்துக் கொண்டான்.













அரச இராணுவமும் பொலீசும் நீதியையும் நியாத்தையும் நிலைநாட்டும் பாதுகாப்புப் படையாக இல்லாமல் அடக்கும் முறைக் கருவியாக மாறிய போது மனித உரிமைகள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டன.






அரசென்பது ஓர் சமூக உடன்படிக்கை. மக்கள் தமது ஆட்சியாளர்களுக்கு ஒப்படைக்கும் அதிகாரத்தை அவர்ள் மனித உரிமைகளைப் பேணும் வகையிலும் பயன்படுத்துவர் என்பது அவர்களின் நம்பிக்கை. இருப்பினும் ஆட்சியாளர்கள் எப்போதும் தமது கடமையை ஒரே மாதிரியாக மேற்கொள்வதில்லை. பதிலாக அவ்வப்போது மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்படுவதும் உண்டு.



சமூகத்தில் மதிப்பிற்குரிய உயர் பதவிகளை வகிப்போர் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தோர். ஆகியோரால் சமூகத்திற்கு நிரந்தரமான சேவைப் பங்கு கிட்டவில்லை. அவர்கள் தமது பதவி அதிகாரங்களை மனித உரிமைகளுக்கு எதிராகப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களும் உண்டு.




# விடுதலைப் போராளிகளிடம் இருந்து எம்மை விடுதலை செய்யுங்கள்.



உரிமைகளை பெறுவதற்கான
போராட்டங்கள் பல இறதியில்
அவ்வுரிமைகளை பறிக்கும்
அதிகாரத்துவங்களாக மாறிய
வரலாறுகள் எம்முன்னே உண்டு.
எனவேதான் உரிமைகளைப்
பெறுவதற்கான போராட்டங்கள்
மனிதஉரிமைகளை
ஸ்திரப்படுத்தும், மதிக்கும்
வழிமுறைகளை கொண்டும்,
மேலும் அவற்றை
எதிர்காலத்தில் ஸ்தூலமாக்கும்
வகையிலான
அமைப்புக்களுக்கு இடம்விட்டுச்
செயற்படுதல் அவசியம்.
இல்லையேல் நம்நாட்டில்
ஏற்பட்ட ஆயுத எதிர்ப்புக்கள்
இறுதியில் மக்களை
மௌனிக்ளாக்கும் வெறும்
பயங்கரவாதமாக
உருவெடுத்தது எமது
அனுபவங்களாகும்.


இயற்கையான ஆற்றலின் விளைவாகவோ அல்லது முக்கிய தேவைகளின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட கடமைப்பாட்டின் விளைவாகவோ கிடைத்த சிவில் அதிகாரத்தையும் சமூக அனுமதியையும் வேட்டைத் தளமாகப் பயன்படுத்தி பிரபுக்கள் குலத்தைச் சேர்ந்தோர் மக்களின் உரிமைகளுக்குச் சாவல் விடுத்த சந்தர்ப்பங்ளே அதிகம்.



ஆயுதப் பயங்கரவாதத்தின் பின்னனியல் வளர்ச்சியடைந்த துரதிஷ்ட வசமான இறந்த கால அனுபவங்களும் எமக்குண்டு. மனித உரிமைகளுள் முக்கிய உரிமையான வாழ்தலுக்கான உரிமை எம்மிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய உரிமைகளையும் அபகரித்துக் கொள்ள முயற்சிக்கும் கொடிய விலங்காக பயங்கரவாதத்தைக் குறிப்பிடலாம்.




ஆணாதிக்க சமுதாயத்தில் அனைத்து உரிமைகளும் தமக்குரியவையென ஆண்கள் எண்ணினர். ஆணாதிக்க கருத்தியலுக்கு அனுகூலமாகவே பெண்கள் இருக்க வேண்டுமெனவும் அனைத்துப் பொறுப்புக்களும் ஆண்களுக்கு உரித்தானதெனவும் கடமைப் பங்கானது பெண்களுக்கு உரித்தானதெனவும் பொதுவான ஒரு அபிப்பிராயம் நிலவியது. இதன் விளைவாக செயற்திறனும் படைப்பாற்றலும் மிக்க பெண்களின் உரிமைகள் அழிந்தொழிந்து செல்லலாயிற்று.




சிறார்கள், சமுதாயத்தில் அனைவரது அன்பிற்கும் ஆதரவிற்கும் உபசரிப்பிற்கும் இலக்காக வேண்டியவர்கள், இருப்பினும் இதற்கு மாறாக பெரியோரின் துன்புறுத்தல்கள், துர்நடத்தை, அநியாயங்களுக்கு இலக்காகும் விகிதம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. இத்தகைய துன்பகரமான நிகழ்வுகளில் இருந்தும் அவமானங்களில் இருந்தும் சிறுவர்களை மீட்டு அவர்களுக்கு உரித்தான மதிப்பையும் உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பது சமுதாயத்தினால் புறுக்கணிக்க முடியதத பொறுப்பாகும்.

*சிறுவர்களை என்னிடம் வருவதற்கு இடமளியுங்கள்* – **யேசு கிறிஸ்து**

*நல்லவைகள் அனைத்ததையும் சிறுவர்களுக்கு அளியுங்கள்* – **லெனின்**







அரசு யாப்பினுடாக அல்லது சட்டங்கள் மூலம் மக்களுக்கு உரிகைளைப் பெற்றுக் கொடுக்கின்றது. இருப்பினும் மக்களுக்குத் தமது உரிமைகள் பற்றிய புரிந்துணர்வு இல்லாவிடின் அவர்களால் தமது உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடிவதில்லை. மக்களின் புரிந்துணர்வற்ற தன்மையின் விளைவாக பலதரப்பட்ட நிறுவனங்கள் பிரஜைகள் பிறரின் உரிமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை. மேலும் பெரும்பான்மையான மக்கள் அவர்களது சமூகபலமின்மைகாரணமாகவும் தம்முரிமைகளை அநுபவிக்கமுடியாது தவிக்கின்றனர்.



# உரிமைகளை வெல்வதற்கான மனிதப் போராட்டம்

அறிவாளிகள், குழுக்கள், நிறுவனங்ள், தத்துவஞானிகள் ஆகியோர் சமுதாயத்தில் மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்காக வரலாற்றில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் போராட்டங்களை நிகழ்த்தியதுடன் குரல் எழுப்பியும் உள்ளனர். இவர்கள் முன்வைத்த கருத்துக்கள் நிரந்தரமான பெறுமதி மிக்கவையாயிற்று. அறிவும் விழிப்புணர்வும் மிக்க மக்கள் மத்தியில் இக் கருத்துக்கள் பெரு மதிப்பையும் வரவேற்பையும் பெற்றது. எனவே தொன்று தொட்டு பெருக்கெடுத்து வந்த இவ் உரிமைப் போராட்டமானது மென் மேலும் முன்னேற்றம் காணலாயிற்று, இப் போராட்ட ஒலியானது இயற்கையாகவே மனிதாபிமானத்தின் ஒலியாக பாிணமிக்கலாயிற்று. இப் போராட்டத்தின் பெறுபேறாகவே இன்று யாப்புகள், உடன்படிக்கைகள் என்பவற்றில் கூட மனித உரிமைகள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றன.







மன்னனின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளின் விளைவாக பன் நெடுங் காலமாக துன்புற்ற மக்கள் அவனது அதிகாரம் குறித்து வினா எழுப்பத் தொடங்கினர். தத்துவ ஞானிகளும் சிந்தனையாளர்களும் துன்புறும் மக்களின் குரலாகத் தோன்றி மன்னனின் ஆதிக்கத்திலிருந்து மக்களை மீட்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர். இதன் விளைவாக துன்புறுத்தும் வர்க்கத்தினர் படிப்படியாக ஆட்சிப் பீடத்திலிருந்து விடைபெறலாயினர். அதனைத் தொடர்ந்து மனித உரிமைகள் புத்துணர்வுடனும் புதுத் தெம்புடனும் சமுதாயத்தினுள் ஊடுருவலாயிற்று. அன்று முதல் இன்று வரை மனித உரிமைகள் தொடர்ந்தும் முன்னோக்கிச் சென்ற வண்ணமுள்ளண.

ஏகாதிபத்திய வாதத்திற்கு எதிரான மக்கள் விடுதலைப் போராட்டங்களின் போதும், போர் எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும் தமது உரிமைகளுக்காகப் போராடினர். இதன் விளைவாகவே மனித உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைகள் தோன்றலாயின.


தொழில் புரியும் மக்கள் சகல விதமான சுரண்டல்களுக்கும் எதிராக இன்றுவரை நிரந்தரமாக போரடிக் கொண்டுள்ளனர். இவ் எழுச்சி உலகிற்கு உரித்தாக்கிய விடயங்கள் பற்பல.




மனித உரிமைகள், யாப்பில் சேர்த்துக் கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து உத்தியோக பூர்வ பாதுகாப்புப் பிரிவினரால் மனித உரிமைகள் மீறப்படுவது மட்டுப்படுத்தப்பட சாதகமான சூழல் உருவகியது.

நாகரீகமான சமுதாயத்தில் பலரும் ஆயுதப் பயங்கரவாதத்திற்கு எதிராகத் தமது வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளனர் எனவே பயங்கரவாதிகளால் தமது கொடூர முயற்சிகளை மனம் போல் நிறைவேற்றுவது இன்று இயலாத ஒன்றாகவுள்ளது.


பெண்கள், சிறுவர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களுக்கு எதிராக நாகரீகமான மக்கள் காட்டும் எதிப்பானது, ஜனநாயக அரசுகள் அத்தகைய கொடுமைகளை குறைப்பதற்கு பெருந் துணையாகவுள்ளது. எனவே சிறுவர், பெண்கள் உரிமைகள் துறையில் முன்னேற்றத்தைக் காணக் கூடியதாயுள்ளது.



# மனித உரிமைகளை இழக்கச் செய்தமையால் ஏற்பட்ட விளைவுகள்




தமது எதிரிகளை அழித்தொழிப்பதை அரசியல்த்திட்டங்களின் ஓர் அங்கமாகக் கொள்ளும் தன்மையானது பல்வேறு நாடுகளைப் போன்று இலங்கையில் பழகிப் போன விடயமாகவுள்ளது. இத் துரதிஷ்டவசமான நிலைமையின் விளைவாக பெறுமதி வாய்ந்த இலட்சக்கணக்கான உயிர்ப் படுகொலைகள் நடைபெற்றுள்ளன. இதன் விளைவாக பரிதாபகராமாக அகாலத்தில் குடும்ப அங்கத்தவர் ஒருவரையோ தமக்கு மிக நெருக்கமான ஒருவரையோ இழக்காத குடும்பங்கள் எமது நாட்டில் இல்லையென்றே கூற வேண்டும்.



பிரதான உரிமைகளுள் ஒன்றான கருத்துத் தெரிவிக்கும் உரிமையும் தகவல்களைச் சேகரிக்கும் உரிமையுயும் பாரிய முறையில் மீறப்பட்டு வருவது துன்பகரமான அனுபவமாயிற்று.

இவ்வுரிமையை அனுபவித்த தொடர்பூடகவியலாளர்கள் மரணத்திற்கும் பல்வேறு கொடுமைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.



சுதந்திரமாக வாக்களிப்பதற்கான உரிமையும், தேர்தல் அபேட்சகராகும் உரிமையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீறப்பட்டுள்ளது.

- ***தேர்தல் மோசடிகள்***
- ***78 ஆம் ஆண்டு யாப்பில் சேர்க்கப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டமூலம். இதன் மூலம் பராராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் அங்கத்துவம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டது.***
- ***80 ஆம் ஆண்டு ஜுலை வேலைநிறுத்தம்.***

நியாயத்தை நிலை நாட்டுவதற்காகக் குரல் கொடுத்த தொழிலாளர்களை தொழிலில் இருந்து நீக்குவதும் கொடூரமான அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்படவுதும் சாதாரண விடயமாயிற்று. அது குறித்து தமது எதிர்ப்பைக் காட்டும் உரிமை கூட மக்களுக்கு இருக்கவில்லை.

மனித உரிமை என்பது சமூகத்தில் ஒரு நபர் அதி கூடிய கௌரவத்துடன் வாழ்வதற்குத் தேவையான நிபந்தனையாகும். இந் நிபந்தனைகளைக் காக்கக் கூடிய சக்தி வாய்ந்த ஒரு நிறுவனம் இருந்தால் மட்டுமே நிபந்தனைகளால் கிடைக்கும் நிவாரணத்தை முழுமையாக அனுபவிக்க முடியும். அத்தகைய சக்தி வாய்ந்த நிறுவனமாக அரசே விளங்க வேண்டும். இவ்வுரிமைகளை அடிப்படைச் சட்டத் தொகுப்பில் அதாவது யாப்பில் சேர்த்துக் கொண்டதனூடாக அரசு அதனைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. மனித உரிமையானது அடிப்படைச் சட்டமாக யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் அது அடிப்படை உரிமையாகப் பரிணமிக்கும். இதற்கிணங்க அடிப்படை உரிமை என்பது அடிப்படைச் சட்டங்களாகக் கொள்ளப்பட்ட மனித உரிமைகளாகும்.

அடிப்படை உரிமை, மனித உரிமை என்பவற்றுக்கிடையில் வேறுபாடு உண்டா.....?
இல்லாவிடின் இரண்டும் ஒன்றா...?



## அடிப்படை உரிமைகளும் அரசியல் யாப்பும்

நவீன உலகில் பெரும்பாலான அரசுகள் தமக்குரிய யாப்பைத் தயாரிக்கும் போது மனித உரிமைகளையும் அதில் உள்ளடக்குகின்றன. உலகில் மிகப் பிரபல்யமான மனித உரிமைப் பிரகடனங்கள், பிரசுரங்கள், அரசறிவியலாளர்களின் முற்போக்குக் கருத்துக்கள் என்பவற்றையே இதற்கு அடிப்படையாகக் கொள்கின்றன.

உதாரணம் :-

*சர்வதேச மனித உரிமைப் பிரகடனம்*

*குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை*

## அடிப்படை உரிமைகளும் இறைமையும்:

இன்றைய உலகில் வெறுமனே நல்லொழுக்க தர்மங்கள் மாத்திரம் அடிப்படை உரிமைகளாகக் கொள்ளப்படுவதில்லை. அவை மக்களுக்குரிய மிக உயர்ந்த அதிகாரமான இறைமையிலிருந்து பாராதீனப்படுத்த முடியாத பிரிவுகளாகும்.

*புதய அரசியலமைப்புச் சட்ட வரைபில் அது இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.*

**"இலங்கைக் குடியரசில், இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். இறைமை என்பது அரசாங்கத் தத்துவங்களையும், அடிப்படை உரிமைகளையும் வாக்குரிமையையும் உள்ளடக்கும்."**

# இலங்கையின் அரசியலமைப்பில் மனித உரிமைகளை உள்ளடக்கிய செயற்திட்டம்

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியலமைப்பான சோல்பரி யாப்பில் மனித உரிமைகள் பற்றிய சரத்து எதுவும் உள்ளடக்கப்படவில்லை. இது இந்த யாப்பில் காணப்பட்ட பாரிய குறைபாடாகும். சிறுபான்மையினரின் உரிமைகளைப் பேணும் வகையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 29 ஆம் சரத்தின் மூலம் நிவாரணம் தேடுவது சிக்கலான விடயமாக இருந்தது.

*உதாரணம் : பிராஜா உரிமைச்சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு*

1947 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் போது இலங்கைப்பிரஜைகள் அனைவருக்கும் வாக்களிக்கும் சுதந்திரம் இருந்தது. அத் தேர்தலின் போது தோட்டப் பகுதிகளில் இருந்து பல அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்கள் அவ்வேளை நடைமுறையில் இருந்த அரசியற் கொள்கைக்கு எதிரான அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினர். இது தமது நிலைப்பாட்டிற்குப் பெருஞ்சர்சையாக இருப்பதை உணர்ந்த அரசு, தேர்தல்ச் சட்ட மூலத்தை மாற்றி பிரஜா உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தி இந்திய வம்சாவளியினரான தோட்டப்பகுதி மக்களின் வாக்குரிமையை ரத்துச் செய்தது.

அன்று தோட்டப் பகுதி மக்களின் வாக்குரிமையை ரத்துச் செய்த அதே அரசியற் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிற்காலத்தில் தோட்டப்பகுதி மக்கள் தமது அனுசரணையாளர்களானவுடன் மீண்டும் அவர்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக் கொடுத்தனர்.

இப் பிரஜா உரிமைச் சட்டத்திற்கு எதிரான வழக்குகள்

*கொடக்கன்பிள்ளை எதிர் முதன்நாயக்க*

*முதன் நாயக்க எதிர் சிவஞானசுந்தரம்*

ஆகியோருக்கிடையில் நடைபெற்றது. இருப்பினும் 29ஆம் சரத்திற்கிணங்க இவ்வழக்குகளின் போது அவர்களுக்கு எவ்விதமான அனுசரணையும் கிட்டவில்லை.

## 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பு

அடிப்படை உரிமைகள் பற்றிய சரத்தொன்று இலங்கையின் அரசியலமைப்பில் முதன் முதலில் சேர்த்துக்கொள்ளப்பட்டது 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பிலேயே. இலங்கையில் மனித உரிமைகள் பற்றிய மிக முக்கியமான மைல்க் கல்லாக இதனைக் குறிப்பிடலாம். இருப்பினும் மனித உரிமைகள் மீறப்படுகின்ற போது செயலாற்றுவதற்கான விசேட நீதிமன்ற அதிகாரங்கள் பற்றி இந்த யாப்பில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. மனித உரிமை மீறலுக்கு இலக்காகும் நபரொருவர் சட்டத்தின் உதவியை நாடலாமெனக் குறிப்பிட்டிருந்த போதிலும் 1978 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப் பட்டிருப்பதைப் போன்று குறிப்பாக இந்த நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென குறிப்பிடப் படவில்லை. எவ்வாறாயினும் மனித உரிமைகளை இலங்கையில் அறிமுகப்படுத்திய பெருமை 1972 ஆம் ஆண்டு யாப்பையே சாரும்.

## 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பு

1972 ஆம் ஆண்டு யாப்புடன் தொடர்புடைய வகையில் மனித உரிமைத் துறையில் குணாம்ச ரீதியில் மேன்மேலும் அபவிருத்தியைக் கொண்ட யாப்பாக இரண்டாம் குடியரசு யாப்பைக் குறிப்பிடலாம். 1972 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்படாத பல்வேறு உரிமைகள் 1978 ஆம் ஆண்டு யாப்பில் உள்ளடக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற போது அவர்களுக்கு நிவாரணம் பெறுவதற்குத் தேவையான நீதிமன்ற அதிகாரங்கள் முன்னரிலும் பார்க்க கூடுதலாக யாப்பினூடாகவே வழங்கப்பட்டிருந்தது. மனித உரிமை மீறலுக்கு உட்படும் நபருக்கு உயர் நீதிமன்றத்தின் உதவியை நாடும் அவகாசம் கிடைத்தது. இருப்பினும் 1972 ஆம் ஆண்டு யாப்பில் குறிபிடப் பட்டிருந்த வாழ்தலுக்கான உரிமை 1978 ஆம் ஆண்டு யாப்பில் உள்ளடக்கப்படவில்லை. அவ்வாறே ஜனாதிபதி, பிரஜை ஒருவரின் மனித உரிமைகளை மீறும் வகையில் செயறப்பட்டால் அதன் பொருட்டு எந்த ஒரு நீதிமன்றத்தினதும் அனுசரணை கிடைக்காமை உட்பட பல்வேறு குறைபாடுகள் அந்த யாப்பில் காணப்பட்டது.

*உதாரணம்:-*
*1983 ஆம் ஆண்டு அவசரகாலத் தடைச் சட்டத்தின் கீழ் நவ சம சமாஜ கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளை தடை செய்த போது மனித உரிமை மீறலுக்கான வழக்கொன்று ஜனாதிபதிக்கு எதிராக தாக்கல் செய்திருக்க வேண்டும். இருப்பினும் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே தமக்கு நேர்ந்த அநியாயத்திற்கு எதிராக அக்கட்சிகளால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியவில்லை.*

# உத்தேச புதிய அரசியல் யாப்பு


ஜனநாயகம், மனித உரிமைகள் தொடர்பாக பரவலாக மேலெழுந்த மக்கள் குரலுக்கு செவிசாய்த்ததன் பெறுபேறாகவே புதிய அரசியலமைப்புச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இச் சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் சாசனமானது முன்னேற்றகரமானதும் முற்போக்கானதுமான சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நடைமுறை யாப்பிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய உரிமைகளை அறிமுகப்படுத்துவதனூடாகவும் தற்போதுள்ள மனித உரிமைகள் பற்றிய விடயப் பரப்பை விஸ்தரித்தும் தயாரித்துள்ள மனித உரிமைகள் பதிவேடானது ஆசியக் கண்டம் முழுவதிலும் காணக் கூடிய மிகச்சிறந்த அடிப்படை உரிமைப் பதிவேடாக விளங்குகின்றது.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினை, ஜனநாயக் மீறல்கள் உட்பட பலதரப்பட்ட அரசியல் விளைவுகளுக்கும் 1978 ஆம் ஆண்டு யாப்பும் ஓரளவிற்குக் காரண கர்த்தாவாயிற்று. எனவே அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யாப்புரீதியான தீர்வொன்று அவசியம் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.


**1978 ஆம் ஆண்டு யாப்பில் மனித உரிமைகள் பற்றிய அத்தியாயம் ஒன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் அவற்றின் முக்கியத்துவம் பற்றியோ நடைமுறைப்படுத்தும் விதம் பற்றியோ முறையான விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே குறிப்பிட்ட சிலர் மாத்திரம் இவ்வுரிமைகளின் மூலம் நிவாரணம் அனுபவிக்க இன்னல்களுக்குட்பட்ட பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களுக்கு எவ்வித நிவாரணமும் பெற முடியவில்லை.**

இருப்பினும் 1978 ஆம் ஆண்டு யாப்பில் மனித உரிமைகள் அத்தியாயத்தை உள்ளடக்கியதன் மூலம் கிடைத்த நிவாரணத்தை நாடி சமுதாயத்தில் பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த பிரஜைகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

1978 ஆம் ஆண்டு யாப்பு நடைமுறைக்கு வந்து ஏறத்தாழ இரு தசாப்தங்கள் ஓடி மறைந்து விட்டன. அத்துடன் யாப்பு நடைமுறைக்கு வந்த காலகட்டத்தில் நிலவிய சமூக பொருளாதார சூழ்நிலைகள் தற்போது மாற்றம் அடைந்துள்ளன. சர்வதேச முதாயத்தில் நிலவுகின்ற அறிவு, தேவைகள் பற்றிய எதிர்ப்பார்ப்பு மறுபுறத்தில் வளர்சியடைந்துள்ளது. அதேவேளை சமுதாயத்தில் விரக்திப் போக்குடன் தொடர்புடைய பல்வேறு சிக்கல்கள் புதிதாகத் தோன்றியுள்ளன. ஜனாதிபதி ஆட்சி முறை, ஆறாவது யாப்புச் சீர்திருத்தம் போன்ற யாப்பியல் சட்ட திட்டங்களின் விளைவாக சமுதாயத்தில் நிலவிய விரக்திப் போக்கு மென் மேலும் சிக்கலானது. இதன் விளைவாக வடக்கிலும் கிழக்கிலும் சில இளைஞர்கள் போராட்டப் பாதையைத் தெரிவு செய்தனர். இவற்றை அடக்குவதற்கும் யாப்பிலேயே வசதி வாய்ப்புக்கள் காணப்பட்டன. புதிய அடக்கு முறைச்சட்டங்கள் அரச யாப்பிற்குள் புகுத்தப்பட்டன. 1978 ஆம் ஆண்டு யாப்பின் மிக முக்கிய அங்கமாக விளங்கிய அடிப்படை உரிமைகள் செயலற்று அப்பாவி நிலைக்குத் தள்ளப்பட்டமை இதன் மூலம் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விளைவாயிற்று.



வடக்கிலும் கிழக்கிலும் மேற் கொள்ளப்பட்ட போராட்ட அடக்கு முறைகளின் போது போராட்டங்களில் ஈடுபட்டவர்களுடன் ஈடுபடாதவர்களும் அடக்குமுறைக்குட்பட்டனர். இச் சூழ்நிலையில் உயிர் துறந்த ஆயிரக் கணக்கான இளைஞர்களின் உயிருக்கு யாப்பின் மனித உரிமை நிவாரணங்களால் எவ்வித பயனும் கிட்டவில்லை.




மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கான பல போராட்டங்கள் நடைபெற்றுள்ளமையை இலங்கை வரலாறு முழுவதிலம் அவ்வப்போது காணக்கூடி யதாயுள்ளது. இப் போராட்ட ஒலிகளுக்கு ஓரளவேனும் செவிமடுக்க வேண்டிய நிலை அவ்வக் கால கட்டங்களில் யாப்புகளைத் தயாரித்தோருக்கு நேர்ந்தது. 1978 ஆம் ஆண்டு யாப்பு தயாரிக்கப்பட்ட பின்னர் இப் போராட்டங்கள் மேன் மேலும் மேலோங்கலாயிற்று. நாட்டி ற்குள் கொடிய தொற்று நோயாகப் பரவி வந்த மனித உரிமை மீறல்களுக்கு. புத்தி ஜவிகளும் தொழில் புரியும் பிரிவினரும் யாப்பியல் நிவாரணம் தேடும் முயற்சியை நாளுக்கு நாள் அதிகரிக்கலாயினர். அதன் பொருட்டு இயற்கையாகவே பல அமைப்புக்கள் உருவாகின. அத்துடன் இந்நிலையைப் பொறுமையுடன் பாாத்துக் கொண்டிருந்த சர்வதேச சமூகமும் இலங்கையில் மனித உரிமைகளை விஸ்தாரிப்பதிலும் மனித உரிமைகளை வலிமையாக்குவதிலும் உள்ள அவசியத்தை எடுத்துக் காட்டியது. புதிய அரசியலமைப்புச் சட்ட வரைவொன்று தோன்றுவதும் அதில் மனித உரிமைகள் தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் உறுதியான அடிப்படையில் யாப்பு மயப்படுத்தப்படுவதும் இந் நிலைப்பாடுகள் மீதேயாகும்.

# புதிய யாப்பொன்றின் வெளியீடு




இத்தகைய இறந்த கால அனுபவங்களைப் பற்றிய புரிந்துணர்வுடன் ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பதற்கு யாப்புத் தயாரிப்பாளர்கள் தூண்டப்பட்டனர். மக்களின் ஆளுமையையும் கௌரவத்தையும் பேணிக்காக்கும் வகையிலான யாப்பொன்றைத் தயாரிப்பதற்கான பாரிய முயற்சிக்கு அவர்கள் வித்திட்டனர். மனித உரிமைகளை யாப்பின் முக்கிய அங்கமாகக் கொண்டு அவ்வுரிமைகளைப் பேணும் வகையில் ஏனைய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இது மக்களின் வேண்டுகோள் மட்டுமன்றி தோன்றியுள்ள சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அத்தியாவசியமாயிற்று.

## மனித உரிமைகள் யாப்பில் உள்ளடக்கப்படுவது பல நல்ல நண்பர்களுடன்.

இதற்கு முன்னர் யாப்புகள் தயாரிக்கப்பட்ட பொழுது நேரடியாக மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்கவில்லை. எனவே யாப்பிற்கும் மக்களுக்கும் இடையில் இருந்திருக்க வேண்டிய இதயபூர்வமான இணைப்பு போதுமானதாக இருக்கவில்லை. இதன் விளைவாக மக்கள் மத்தியில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றலாயின. இவ் இறந்தகால அனுபவத்தை மனத்திற் கொண்டு புதிய யாப்புத் தயாரிப்பாளர்கள் இந்த யாப்பு படிப்படியாக மக்கள் அபிமானத்தைப் பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டவரைவு இறுதியில் மக்கள் விருப்புடனே நிறைவேற்றப்படும்.


புதிய அரசியல் யாப்பொன்றிற்காக......




## புதிய அரசியலமைப்பில் மனித உரிமைகளின் உருவம் - குணம்....


- இதுவரையில் அறிமுகப்படுத்தப்படாத புதிய உரிமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- தற்போதுள்ள உரிமைகளின் பரப்பு விஸ்தரிக்கப்படும்.
- தற்போதுள்ள சில சாதாரண உரிமைகள் அடிப்படை உரிமைகளாக உயர்த்தப்படும்.
- உரிமைகளை மட்டுப்படுத்துவது குறைக்கப்படும்.
- உரிமை மீறலுக்குட்பட்டோர் நிவாரணம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் விஸ்தரிக்கப்படும்.

# வாழ்வதற்கான உரிமை.




வாழ்வதற்கான உரிமை என்பதென்ன...?
வாழ்வதற்கான உரிமை என்பது வெறுமனே உயிரைக் காத்துக் கொள்வதற்கான உரிமை மட்டுமல்ல நானும் நியும் நாமும் சமுதாயத்தில் கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையாகும்.
பழைய யாப்புகளில் இந்த உரிமை இருக்கவில்லையா?
1972 ஆம் ஆண்டு யாப்பில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் 1978 ஆம் ஆண்டு யாப்பில் இருந்து வாழ்வதற்கான உரிமைகள் நீக்கப்பட்டன.
வாழ்தலுக்கான உரிமை இல்லாவிட்டால் ஏனைய உரிமைகள் இருந்தும் பயனில்லையே....
அது உண்மை எமது நாட்டில் கடுமையாக மீறப்பட்டதும் இந்த வாழ்தலுக்கான உரிமை தான். எமது நாட்டில் வாழ்தலுக்கான உரிமை பற்றிக் குறிப்பிடப்படாவிடினும் இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளில் மிக முன்பே வாழ்தலுக்கான உரிமையை யாப்பில் உள்ளடக்கியுள்ளனர்.

# இந்தியாவில் வாழ்தலுக்கான உரிமை பேணப்படும் விதம்.



நதிக்கரை ஓரங்களில் அமைந்துள்ள கைத்தொழில் நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்கள் கங்கா நதியில் கலந்ததன் விளைவாக அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் பல்வேறு நோய்களுக்குட்பட்டதுடன் பலர் மரணத்தையும் தழுவினர். எனவே மனிதாபிமானம் மிக்க ஒரு சமூக விஞ்ஞானி மோசமான இந்நிலைக்கு எதிராக வாழ்தலுக்கான உரிமை பற்றிய யாப்பியல் நிவாரணத்தின் கீழ் இந்திய நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். இந்திய நீதிமன்றம் அம்மனுவை விசாரணை செய்து அவருக்குச் சார்பாக தீர்ப்பளித்தது.



பம்பாய் நகரில் அமைந்திருந்த சேரிப்புறக்கிராமம் ஒன்றின் குடிசைகளை அரசு தரைமட்டமாக்கியதுடன் மக்களையும் அங்கிருந்து வெளியேற்றியது. இருப்பினும் அம் மக்கள் மனந்தளராமல் வாழ்தலுக்கான உரிமை பற்றிய நிவாரணத்தின் கீழ் இது குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததன் மூலம் நீதிமன்றத்தின் உதவியைக் கோரினர். அம் மக்களின் வாழ்தலுக்கான உரிமை மீறப்பட்டிருப்பதாக தீர்ப்பளித்த நீதிமன்றம் அம் மக்களுக்கு நிவராணம் வழங்கியது.

# அதேபோல் இலங்கையில்.....
# ரிச்சர்ட்



பிரபல தொடர்பூடகவியலாளரான ரிச்சட் டி சொய்சாவின் மரணத்தையிட்டு சட்ட நிவாரணம் வழங்குமாறு அவரது தாயார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். இருப்பினும் 1978 ஆம் ஆண்டு யாப்பின் அப்படைஉரிமைகளுக்கிணங்க அத்தகைய நிவாரணங்களைப் பெறக் கூடிய வழிமுறைகள் எதுவும் காணப்படவில்லை.

ஆனால் உத்தேச அரசியலமைப்புச் சட்ட வரைவில் வாழ்தலுக்கான உரிமை மிக முக்கிய உரிமையாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

## உத்தேச அரசியலமைப்புச் சட்ட வரைவில்

சித்திரவதைகளில் இருந்து அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகைக் குட்படுத்தப்படுவதிலிருந்து மீளுவதற்கான உரிமை.

- *உங்களை சித்திரவதை செய்வதற்கு எவருக்கும் உரிமையில்லை.*
- *உங்களை நிந்திப்பதற்கோ அவமானப்படுத்துவதற்கோ எவருக்கும் உரிமையில்லை.*
- *உங்களுக்குக் கொடுமை செய்ய எவருக்கும் உரிமையில்லை.*


**இவை அனைத்தும் உத்தேச யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

**சட்டத்திற்கு முரணான முறையில் கைது செய்யப்படுவதோ மறியற் தண்டணைக்கு உட்படுத்தப்படுவதோ உடலியல் ரீதியாக தடுத்து வைக்கப்படுவதோ எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையிலான தண்டனைக்கு உட்படுத்தப்படுவதோ தடைசெய்யப்பட்டுள்ளது.**

- *சட்ட நடைமுறைகளுக்கிணங்க நியாயமான காரணம் எதுவுமின்றி உங்களை எவரும் கைது செய்ய முடியாது.*
- *ஒருவரைக் கைது செய்யும் போது கைது செய்யப்படுவதற்கான காரணத்தை அறிவிக்க வேண்டும்.*
- *கைது செய்யப்பட்டமைக்கான காரணங்களை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளவும் சந்தேக நபருக்கு அதிகாரமுண்டு.*
- *சந்தேகத்தின் பேரில் கைது செய்து ஒருவரைத் தடுத்து வைத்துள்ள போது. அவர் விரும்பும் எவரேனும் உறவினருடன் அல்லது நண்பருடன் தொடர்பு கொள்வதற்கு உரித்துடையவராவார்.*
- *தடுப்புக் காவலில் இருக்கும் போது சட்டத்தரணி ஒருவரைக் கலந்தாலோசிப்பதற்கு உரிமையுண்டு. அதன் பொருட்டு 'அரசு எல்லா நியாயமான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.*
- *பிணையின் மீது விடுதலை செய்யப்படும் ஒருவருக்கு விதிக்கப்படும் பிணைத்தொகை மிதமிஞ்சியதாகத் இருத்தலாகாது.*
- *வழக்கு விசாரணைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.*

***இவ்வுரிமைகள் அனைத்தும் உத்தேச அரசியலமைப்புச்சட்ட வரைவில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன.***



# சமத்துவத்திற்கான உரிமை

*புதிய யாப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.*

சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவ தற்கும் உரித்துடையவர்கள்.

இனம் மதம், மொழி, சாதி, பால் அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் என்பன காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் ஏதேனும் ஒன்று காரணமாக எப் பிரஜையையும் ஓரங் கட்டப்படலாகாது.

**புதிய யாப்பில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளவை.**

- நாட்டிற்குள் இருப்பிடங்களை அமைக்கும் உரிமை
- நாட்டிற்குள் நடமாடும் உரிமை
- நாட்டை விட்டு வெளியில் செல்லும் உரிமை
- மீண்டும் நாடு திரும்பும் உரிமை

# தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைக்கான உரிமை

- சகல பிரஜைகளுக்கும் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்கும்.
- கடிதம், செய்தித் தொடர்புகளுக்கும்.
- நிந்திக்கப் படுதலுக்குள்ளாகாமல் சுதந்திரமடைவற்கும்.

**புதிய யாப்பில் உரிமை வழங்கப்பட்டுள்ளது.**
**இதற்கிணங்க ....**




- உங்கள் சொந்த விடயங்களை சோதனை செய்வதற்கு எவருக்கும் உரிமை இல்லை.
- அரசிற்குக் கூட உங்கள் கடிதங்களைப் பிரித்துப் பார்க்க முடியாது.

## சிந்தனை செய்யும், சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம்


எவருமே மற்றொரு பிரஜையின் மனச்சாட்சிக்கு அச்சுறுத்தல் விடுக்க முடியாது. சகல பிஜைகளும் சுதந்திரமாச் சிந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. தாம் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவரா்ய் இருப்பதற்கு அல்லது கடைபிடிப்பதற்கு சகல பிரஜைகளுக்கும் உரிமையுண்டு.




இச் சுதந்திரமானது படைப்பாற்றலுக்கு மிக முக்கியமானது. ஒரு நபர் சமூகத்துடன் கொண்டுள்ள பிணைப்பு சிறப்பதற்கும் இவ்வுரிமைகள் அவனுக்கு இன்றியமையாதது. மனிதனது படைப்பாற்றலின் விளைவாக பல விடயங்களை நிர்மானிப்பதற்கும் தனது சுற்றுப் புறச் சூழலைத் தனக்கேற்ப அமைத்துக் கொள்வதற்கும் இவ்வுரிமை பிரஜைகளுக்கு இருக்க வேண்டும்.

## பேச்சுச் சுதந்திரம்

பேச்சுச் சுதந்திரம் என்பது மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். அவனின் படைப்புத்திறன் நிலைத்திருப்பதற்கும் பிரகாசிப்பதற்கும் பேச்சுக் சுதந்திரம் மிக முக்கியமானது. சமூகத்தில் தனது தனித்துவத்தையும் கௌரவத்தையும் நிலை நிறுத்துவதற்கு இச் சுதந்திரம் மிக முக்கியமானது.




**சமூகத்திலுள்ள பிறரைத் துன்புறுத்தும் வகையிலோ அவமானப் படுத்தும் வகையிலோ அல்லது அவர்களின் நம்பிகைகளை அவமதிக்கும் வகையிலோ பேசுவது, பேச்சுச் சுதந்திரமாகாது.**

## அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் ஒழுங்கு சேர்வதற்குமான உரிமை


இவ்வுரிமைக்கிணங்க

- அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை.
- தொழிற்சங்கமொன்றை அமைக்கும் உரிமை
- தொழிற் சங்கமொன்றில் அங்கம் வகிக்கும் உரிமை என்பன உண்டு.

# கருத்து வெளியிடும், தெரிவிக்கும் சுதந்திரம்

கருத்து வெளியிடும் சுதந்திரமும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் இன்றைய உலகில் பிரதான உரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன. வெளியீட்டுச் சுதந்திரத்தை வழங்காத நாடுகள் ஜனநாயகப் பாதையில் இருந்து வெகு தூரம் விலகிச் சென்ற நாடுகளாகக் கொள்ளப்படும். புதிய யாப்பில் இச் சுதந்திரத்தற்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படுள்ளது.


**மற்றொருவரதோ நிறுவனத்தினதோ அல்லது சமூகத்தினதோ உரிமைகளை மீறாத வகையில் இவ்வுரிமைகள் அனுபவிக்கப்பட வேண்டும்.**





உனது கருத்தை நான்
முற்றிலும் எதிர்க்கின்றேன்
இருப்பினும் அதைத்
தெரிவிப்பதற்கு உனக்கிருக்கும்
உரிமையின் பொருட்டு
நான் தோற்றுகின்றேன்.
**வோல்டெயர்**

## தகவல்களைப் பெறுவதற்கான உரிமை :-




தகவல்களைப் பெறுவதற்கான உரிமை பேணப்பட்டால் மாத்திரமே பேச்சுச் சுதந்திரம், கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் என்பன முழுமை பெறும்.


தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்


உத்தேச யாப்பில் இது புதிய உரிமையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.


## தான் விரும்பிய மொழியில் கடமையாற்றும் உரிமை

தாம் விரும்பும் மொழியில், தமது சுய பாஷையில் கடமையாற்றும் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள் விடுத்தமைக்கு குறிப்பிடத் தக்க வரலாறு ஒன்றுண்டு. இருப்பினும் இவ்வுரிமை கிடைக்காமையால் சிறுபான்மையினரின் வெறுப்பு நாளுக்கு நாள் துளிர் விடலாயிற்று. பிற்பட்ட காலத்திலாவது யாப்பினூடாக இவ்வுரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முயன்றமையை மிக முக்கிய விடயமாகக் கருதலாம். தான் விரும்பிய மொழியில் கடமையாற்றும் சுதந்திரமானது அடிப்படை உரிமையாக இந்த யாப்பினூடாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இவுரிமையைப் பேணும் வகையில் யாப்பின் 27 ஆம் சரத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளும் அரசகரும மொழிகளெனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சொந்தக் கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கும் மேம் படுத்துவதற்குமான உரிமை.










**சட்ட முறையான கைத்தொழில், தொழிலில், வியாபாரத்தில் அல்லது தொழில் முயற்சியில் ஈடுபடும் உரிமை.**

*சாதாரண கைத்தொழிலிலோ வியாபராத்திலோ ஈடுபடுவதற்குரிய உரிமை உத்தேச யாப்பில் அடிப்படை உரிமையாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. சமுதாயத்திற்கோ மக்களுக்கோ பாதிப்பு ஏற்படாத வகையில் அவ்வுரிமைகளை விருத்தி செய்வதும் பரவலாக்குவதும் மக்களின் உரிமையாகும். இருப்பினும் சமூகத்தைப் பாதிப்பதும் தீங்கிளைப்பதுமான வியாபாரம் கைத்தொழில் அல்லது தொழிலைச் செய்வது உரிமையாகாது. அத்தகைய விஷமச் செயல்களைத் தடுத்து நிறுத்துவற்கு அரசிற்கு பரிபூரண அதிகாரம் உண்டு.*



## சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை

- ஒவ்வொரு பிரஜையும் தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து சொத்துக்களை உடைமையாகக் கொண்டிருக்க முடியும்.
- சட்ட பூர்வமான நடவடிக்கைகள் மூலமன்றி இவ்வுரிமைகளை எவராலும் ரத்துச் செய்ய முடியாது.
- பொது நல நோக்கம் கருதி ஒருவரது வீடு, வளவு போன்றவற்றை அரசு கைப்பற்றுமானால் அதற்குரிய நட்ட ஈட்டை வழங்க வேண்டும்.





இத்தகைய பாரிய மதிப்பிற்குரிய அடிப்படை உரிமைகளை முன்வைத்ததைப் போலவே அவற்றைப் பேணுவதற்கான அரச கொள்கை பற்றிய நெறிமுறைக் கோட்பாடுகள் அடிப்படைக் கடமைகள் என்பன பற்றியும் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களும் (மாகாண சபை, கூட்டுத் தாபனங்கள், திணைக்களங்கள், சபைகள் இவ்வுரிமைகளை மீறாத வகையில் செயலாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளது. இதற்கிணங்க.

அதற்கிறணங்க **ஆட்சேர்ப்பு**
**பதவி உயர்வு**
**இட மாற்றம்**


என்பன அடிப்படை உரிமைகளுக்கு இணங்க ஒழுங்கு செய்யப்பட வேண்டும். இவ் யாப்பில் அடங்கியுள்ள மனித உரிமைகளினூடாக பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களின் உரிமைகள் மீறப்படாத வகையில்,

- அரசின் காணிக்கொள்கைகள்
- தொழிற்சாலை அமைத்தல்
- எரிபொருள் உற்பத்தி
- விவசாய மீன்பிடித்துறைக் கொள்கைகள்
- உயர் கல்வி வாய்ப்புக்கள்
- நீர்ப்பாசன நடவடிக்கைகள்
- தொடர்புகள் ஆகிய அனைத்தும் ஒழுங்கு படுத்தப் படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.


இவ்வளவு மனித உரிமைகள் யாப்பில் சேர்க்கப்பட்டிருப்பது நல்லதே. முன்னைய யாப்பிலும் இவை இருந்த போதிலும் எந்தனை பேரால் தான் பயன் பெற முடிந்தது.
அது அந்தக் காலம் புதிய யாப்பில் மனித உரிமைகள் உள்ளடக்கப்படிருப்பது மட்டுமன்றி பொது மக்கள் அவற்றை அனுபவிக்கும் வகையில் இலகுபடுத்தியும் உள்ளது.
அதெப்படி
இந்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் பெரும்பாலனவற்றுக்கு எந்த வரையறையும் விதிக்க முடியாது. ஜனநாயகத்தைப் பேணுவதற்கு அத்தியவசியமான நிலையில் மாத்திரமே இத்தகைய வரையறைகள் விதிக்க முடியும். அதனைத் தீர்மானிக்கும் உரிமை நீதித்துறைக்கு மாத்திரமே உண்டு
மனித உரிமை மீறப்படும் பட்சத்தில் உரிமை மீறப்பட்டு 30 நாட்களுக்கிடையில் வழக்குத் தொடர வேண்டும்... அப்பாவிப் பிரஜை ஒருவர் அத்தனை குறுகிய காலத்திற்குள் இத்தகைய பாரிய வழக்கைத் தொர்டர்வதெப்படி......
அது 78 ஆம் ஆண்டு யாப்பில் இப்போது அக் காலக்கெடு 3 மாதங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.
எத்தகைய சட்ட நடவடிக்கையும் மேட்கொள்ள முடியாத அப்பாவிப் பிரஜை ஒருவரின் உரிமை மீறப்படும் பட்டசத்தில் அரசிற்கு எதிராக அவர் வழக்குத் தொடர்வதெப்படி...? அவ் வழக்கை ஒழுங்குபடுத்தவும் காலம் தேவையே.....
நீங்கள் சொல்வது 78 ஆம் ஆண்டு யாப்பைப் பற்றி புதிய யாப்பில் அப்படி இல்லை. உரிமை மீறலுக்குட்பட்ட பிரஜைக்குப் பதிலாக வேறொருவர் அடிப்படை உரிமை வழக்கொள்றைத் தொடுக்க முடியும்.
அதெவ்வளவு நல்லது
அது மட்டுமல்ல சில பிரஜைகள் இணைந்த குழுக்களாலும் வழக்குத் தொடர முடியும்.
ஆட்சியாளர்களால் அல்லது யாப்பினூடாக உரிமைகள் மீறப்பட்டால் அதற்கும் நிவாரணம் பெற முடியும் தவறியேனும் நீதித்துறையால் உரிமைகள் மீறப்பட்டால் நாம் என்ன செய்வது....
நீதி மன்றத்தால் உரிமையொன்று மீறப்படுமானால் அதற்கு நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகளும் புதிய யாப்பில் உண்டு. வழக்குத் தீர்ப்பின் போது ஏதேனும் அநீதி நிகழுமானால் அரசிடம் நட்ட ஈடு கோரவும் முடியும்.




இவ்வடிப்படை உரிமைகளை பரந்த அடிப்படையில் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுக்கின்ற போது சமூகத்தின் பிரதான அங்கங்கள் பலவற்றில் அமைப்பு ரீதியான மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. இதனையிட்டு அரசு பாரியதும் சூக்குமமானதுமான பொறுப்பை வகிக்க வேண்டியுள்ளது. முக்கியமாக பாதுகாப்புச் சேவையை அடக்கு முறை உபகரணமாகவன்றி ஒரு சேவையாக நவீனமயப்படுத்த வேண்டியுள்ளது. நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் போதும் நீதி விசாரணைகளின் போதும் புதிய நடைமுறைகளைத் தேட வேண்டிய நிலை பாதுகாப்புப் பிரிவிற்கு ஏற்படும்.




## உரிமையும் கடமையும்

தனியே அரசாங்கத்தால் மாத்திரம் மனித உரிமைகளைப் பேண முடியாது. அவற்றிலிருந்து சாதகமான பலன்களைப் பெற வேண்டுமானால் மக்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் ஒழுங்காக நிறைவேற்றப்பட வேண்டும்.

## மக்களின் கடமைகள் எவை?

அது மிகச் சுலபானது. உரிமைகளை அனுபவிக்கும் ஒவ்வொரு பிரஜையும் மற்றொரு பிரஜையின் உரிமையை மீறாத வகையில் நடந்து கொள்வதே அவர்களின் பிரதான கடமையாகும். ஒருவரது வாழ்தலுக்கான உரிமையை ரத்துச் செய்பவருக்கும் அவ்வுரிமையை அனுபவிப்பதற்கு எந்த அதிகாரமும் இல்லை. அயலவர், சமூகம், சுற்றாடல் என்பவற்றுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அடிப்படை உரிமைகளையும் பிற உரிமைகளையும் பேண வேண்டும்.



**என் கையிலுள்ள கைத்தடியை என் விருப்பம் போல் சுழற்ற முடியும் இருப்பினும் எனது சழற்சியானது மற்றவரின் மூக்கு நுனியுடன் மட்டுப்படுத்தப்படும்.**

***ஜோன் லொக்***

மனித உரிமைகளை இவ்வாறு பரந்த அடிப்படையில் யாப்பில் உள்ளடக்கியதுடன் இலங்கை மக்களுக்கான மானிட கௌரவம் வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் மேம் படுத்தபட்டுள்ளது. மக்கள் உரிமைகளைப் பேணுவதற்காக இவ்வாறு யாப்பியல் ரீதியான அனுகூலங்கள் கிடைத்தவுடன் மக்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் கை கூடுமென எதிர்பார்க்க முடியாது. இவற்றைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பைப் பிரஜைகளும் தவிர்க்க முடியாது. தனது உரிமைகள் எவ்வளவு முக்கியமானதோ மற்றவரின் உரிமைகளும் அதே அளவு முக்கியமானது. என்பதை மனதில் கொண்டு ஒவ்வொரு பிரஜையும் பிறரின் உரிமைகளை மீறாத வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

*Offset by ANCL Commercial Printing Dept.*